TAMIL MURASU, FRIDAY, 15 APRIL 2022, PAGE 2

# என்டியுவுடன் தொடர்பை வலுப்படுத்தும் ஐரோப்பிய, அமெரிக்க நிறுவனங்கள்

நன்யாங் தொழில்நுட்ப பல்கலைக் கழகத்தின் கல்வியாளர்கள், மாணவர்களின் ஒத்துழைப்பை நாடும் நிறுவனங்களுக்கு கைகொடுப்பதற்காக புதிய திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

வர்த்தக ஆய்வு சோதனைக் கூடம், கூட்டு ஆய்வு நிலையங்கள் போன்றவை திட்டங்களில் சில.

குளோபல் அலையன்ஸ் ஆஃப் இண்டஸ்டிரிஸ்@என்டியு (கெய்ன்) எனும் புதிய முயற்சி தொழில்துறையினருடன் தொடர்பை வலுப்படுத்தும் பல்கலைக்கழகத்தின் பல தரப்பட்ட திட்டங்களை ஒருங்கிணைக்கும்.

அனைத்துலக நிறுவனங்களுக்கு தேவைப்படும் சுகாதாரப் பராமரிப்பு, பொறியியல், தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளில் உள்ள பல்கலைக்கழக நிபுணர்களை அடையாளம் காணவும் புதிய முயற்சி உதவும்.

தொழில்துறை, அரசாங்கம், கல்வி நிலையம் ஆகியவற்றுக்கு இடையிலான தொடர்பு, புத்தாக்கத்தின் மூலம் பொருளியலைத் தூண்டும் அரசாங்கத்தின் இலக்கை பூர்த்தி செய்ய மிகவும் அவசியம் என்று வர்த்தக, தொழில் துணை அமைச்சர் லோ யென் லிங் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க வர்த்தக, தொழில் சபை, ஐரோப்பிய வர்த்தக, தொழில் சபை ஆகியவற்றுடன் சேர்ந்து என்டியுவின் 'கெய்ன்' ஏற்பாடு செய்த நிகழ்ச்சியில் அமைச்சர் கலந்து கொண்டு பேசினார்.

என்டியுவுடன் இணைந்து செயல்படும் வாய்ப்புகளைக் கண்டறியும் நோக்கத்தோடு பிரெஞ்சு அழகு சாதன நிறுவனமான லோரியல், அமெரிக்க தொழில்நுட்ப நிறுவனமான ஐபிஎம் உட்பட பல நிறுவனங்கள் இதில் பங்கேற்றன.

கலாசார, சமூக, இளையர் துறை துணை அமைச்சருமான லோ, புத்தாக்கம் மற்றும் புதிய சந்தைகளில் நிறுவனங்கள் நுழைய இத்தகைய ஒத்துழைப்பு மிக முக்கியம் என்று குறிப்பிட்டார்.

"உள்ளூர் நிறுவனங்கள், ஆய்வாளர்கள், தொழில்துறை பங்காளிகள் தங்களது வர்த்தக ஆற்றலை மேம்படுத்த 'கெய்ன்' எனும் தளத்தை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்" என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

நன்யாங் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் தலைவரான சுப்ரா சுரேஷ், நிகழ்ச்சியை தொடங்கி வைத்து உரை ஆற்றினார்.

அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசாவுக்கு இங்குள்ள பொது, தனியார் துறைகளில் ஆழமான தொடர்பு இருப்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

அமெரிக்க தொழில் நுட்ப நிறுவனமான எச்பி, ஜெர்மன் மோட்டார் வாகன நிறுவனமான காண்டினெண்டல் ஆகிய இரண்டு நிறுவனங்கள் என்டியு வளாகத்தில் வர்த்தக ஆய்வகங்களை அமைத்து உள்ளதை சுப்ரா சுரேஷ் எடுத்து உரைத்தார்.